# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **161/2016**

ஆணை எண். **136/2016**

நாள் : **03/08/2016**

**திருவாளர்கள் இரஜீதா**
**இன்பிராஸ் கம்பெனி (பி) லிமிட்டெட்,** — **முறையீட்டு மனுதாரர்**
**சென்னை –87.**

**மாநகராட்சி ஆணையர்,**
**மதுரை மாநகராட்சி,**
**மதுரை – 625 002.** — **எதிர் மனுதாரர்**

சென்னை, ஆழ்வார் திருநகர், எண்.11, புது காலனி பிரதான சாலையில் செயல்பட்டுவரும் திருவாளர்கள் இரஜீதா இன்பிராஸ் கம்பெனி (பி) லிமிட்டெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அவர்களின் 07.03.2016 நாளிட்ட முறையீட்டு மனு 09.03.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 161/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை ஆழ்வார் திருநகர், புதுக்காலனி பிரதான சாலை, எண்.11–ல் செயல்பட்டு வரும் திருவாளர்கள் இரஜீதா இன்பிராஸ் நிறுவனத்தினர், மதுரை மாநகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் பாதாள சாக்கடை பராமரிப்பு பணியினையும், 13 கழிவு நீரேற்று நிலையங்கள் பராமரிப்பு பணியினையும் மேற்கொள்வதற்கான பணி ஒப்பந்தம் 15.07.2010 அன்று மதுரை மாநகராட்சியுடன் செய்து கொண்டனர். மேற்படி ஒப்பந்தத்தின் படி 15.07.2010 முதல் 31.12.2013 முடிய மேற்படி பணியினை சென்னை இரஜீதா இன்பிராஸ் நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர். 31.12.2013 அன்று பணி ஒப்பந்தம் முடிவுக்கு வந்த பின்பும் தங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ரூபாய் 1,77,57,596/– வழங்கப்படாததுடன், 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான 5% கூடுதல் தொகையும் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது என தெரிவித்து, இது சம்பந்தமாக உரிய ஆணையினை வழங்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

மதுரை மாநகராட்சியும் ஒப்பந்த நிறுவனமும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் "Obligatory Action of Corporation of Madurai" என்ற தலைப்பின், 5–வது கூற்றின் (Clause) படி" Payment will be made monthly on receipt of Bills from the contractor following MMC Regulations " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது எனவே ஒப்பந்த நிறுவனம் செய்து முடித்த பணிக்கு பட்டியல்கள் உரிய வரைமுறைகளின் படி தாக்கல் செய்திருந்தால், காலம் தாழ்த்தாமல் பட்டியலுக்கான தொகையை வழங்கப்பட வேண்டும். இந்நேர்வில், மதுரை மாநகராட்சி ஒப்பந்த நிறுவனத்திற்கு ஆண்டுகள் மூன்று கடந்த நிலையிலும் நிலுவைத் தொகையை வழங்கப்படாதது நிர்வாகத்தின் செயல்பாட்டுக்கு களங்கம் ஏற்படுத்துவதாகவே உள்ளது. எனவே இனியும் காலம் தாழ்த்தாமல் ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்படவேண்டிய தொகையை தீர்வு செய்ய மதுரை மாநகராட்சி நடவடிக்கை மேற்கொள்ளும் என இம்முறைமன்றம் கருதுகிறது.

இந்நேர்வு சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தில் " The provisions of the India Arbitration of Reconciliation Act, 1998 and the rules there under the statutory modification thereof shall be deemed to such reference and deemed to be incorporated in the contract " என்ற கூறு (Clause) சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (4) (c) – ல் குறிப்பிட்டுள்ளபடி, முறையீடு செய்துள்ளவருக்கு பிற தீர்வுகள் கிடைக்கத்தக்கதாக இருக்கும் போது மற்றும் வழக்கின் சூழ்நிலைகளின் நோக்கில் அத்தகைய தீர்வுகளை பெறுவது முறையீடு செய்துள்ளவருக்கு அதிகப்படியான நலனைத் தரக்கூடியதாக இருக்கும் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே தங்களுக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகையை வழங்குவதற்கு மதுரை மாநகராட்சி இனியும் காலம் தாழ்த்தினால் பணி ஒப்பந்தக் கூற்றின் (Clause) படி நடுநிலையாளரிடம் (Arbitration) முறையீடு செய்வதற்கும் தடையேதும் இல்லை என முடிவு செய்து ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பெறுநர்

ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை –625 002.

நிர்வாக இயக்குநர்,
திருவாளர்கள் இரஜிதா இன்பிராஸ் நிறுவனம்,
11, புது காலனி பிரதான சாலை,
ஆழ்வார் திருநகர்,
சென்னை – 600 087.

/உண்மை நகல்/

செயலாளருக்காக.